இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 04-12-2024

இதோ! மூன்றாவது பேரிடரும் வந்தே விட்டது...

இதுவரை ஏற்பட்ட இரண்டு பேரிடர்களுக்கும் நிவாரண நிதி தரவில்லை ஒன்றிய பா.ஜ.க. அரசு. இப்போது இதோ! மூன்றாவது பேரிடரும் வந்துவிட்டது.

தமிழ்நாட்டில் ஃபெஞ்சல் புயலினால் ஏற்பட்டுள்ள தாக்கத்தினையும், அதனால் ஏற்பட்டுள்ள கடுமையான மற்றும் வரலாறு காணாத சேதங்களையும் கவனத்தில் கொண்டு சேதமடைந்த உள்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரத்தை தற்காலிகமாக சீரமைக்க தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக 2 ஆயிரம் கோடி ரூபாய் நிதியினை விடுவித்திடுமாறு கோரி மாண்புமிகு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் அனுப்பி இருக்கிறார்கள்.

ஃபெஞ்சல் புயல் 23, நவம்பர் 2024 அன்று குறைந்த தாழ்வழுத்தப் பகுதியாக உருவெடுத்து, தமிழ்நாட்டின் 14 மாவட்டங்களில் வரலாறு காணாத பேரழிவை ஏற்படுத்தி உள்ளது.

தொடக்கத்தில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களில் கனமழை பெய்ததைத் தொடர்ந்து, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களில் மிக கனமழை பெய்தது. டிசம்பர் 1 ஆம் தேதி ஃபெஞ்சல் புயல் கரையைக் கடந்தபோது, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் காற்றின் வேகம் அதிகம் ஆனதால் சாலைகள் மற்றும் மின் இணைப்புகள் கடுமையாக சேதமடைந்தன. தருமபுரி, கிருஷ்ணகிரி, ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர் உள்ளிட்ட உள்மாவட்டங்களில் கனமழை காரணமாக மிகப்பெரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தப் பேரிடரால் மொத்தம் 69 இலட்சம் குடும்பங்களும், 1.5 கோடி பேர்களும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வருத்தத்துடன் தனது கடிதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இந்தப் பேரழிவின் காரணமாக, 12 மனித உயிரிழப்புகளும், 2,416 குடிசைகள், 721 வீடுகள் மற்றும் 963 கால்நடைகள் இழப்புகளும் ஏற்பட்டுள்ளதோடு, 2,11,139 ஹெக்டேர் பரப்பளவிற்கு விவசாய மற்றும் தோட்டக்கலை நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

புயல் வெள்ளத்தினால் 9,576 கி.மீ சாலைகள், 1,847 சிறுபாலங்கள் மற்றும் 417 குளங்கள் சேதமடைந்துள்ளதாகவும், 1,649 கி.மீ அளவிற்கு மின் கடத்திகள், 23,664 மின்கம்பங்கள் மற்றும் 997 மின்மாற்றிகள் சேதமடைந்துள்ளதாகவும், 1,650 பஞ்சாயத்து கட்டிடங்கள் 4,269 அங்கன்வாடி மையங்கள், 205 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 5,936 பள்ளிக் கட்டடங்கள், 381 சமுதாயக் கூடங்கள் மற்றும் 623 குடிநீர் வழங்கல் பணிகள் கடுமையாக சேதமடைந்துள்ளன.

இந்தச் சேதங்கள் குறித்து, தமிழ்நாடு அரசு முதற்கட்ட மதிப்பீட்டை மேற்கொண்டு, தற்காலிக சீரமைப்பு பணிகளுக்கு ரூ.2,475 கோடி தேவைப்படுகிறது என முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இதில் முதல் கட்டமாக ரூ.2 ஆயிரம் கோடியை வழங்க வேண்டும் என்று கோரி இருக்கிறார்கள். மக்கள் எதிர்கொண்ட பேரிடரை ஒன்றிய பா.ஜ.க. அரசு உணருமா எனத் தெரியவில்லை.

கடந்த ஆண்டில் இரண்டு முறை புயல்கள் தாக்கி, கடும் இயற்கைப் பேரிடர்களை தமிழ்நாடு சந்தித்தது. இவற்றுக்கான நிவாரணமாக, 37 ஆயிரம் கோடி ரூபாய் கேட்டோம். ஆனால் ஆண்டுதோறும் வழக்கமாக வழங்கப்பட வேண்டிய ரூ.276 கோடி நிதியை அளித்துவிட்டு, ஏமாற்றி விட்டார்கள்.

தமிழ்நாடு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, டெல்லி சென்று கடந்த ஜூன் 22 ஆம் தேதி நடைபெற்ற நிதி அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார். **"இரண்டு இயற்கை பேரிடர்களை தமிழ்நாடு சந்தித்தது. இதற்கான நிவாரண நிதியாக ரூ.37,906 கோடியைக் கேட்டிருந்தோம். ஆனால் ரூ.276 கோடியைத் தான் இதுவரை கொடுத்துள்ளீர்கள். இது தமிழ்நாட்டுக்கு இழைக்கப்பட்ட மிகப்பெரிய அநீதியாகும்"** என்று குற்றம் சாட்டினார். இதற்கு ஒன்றிய அரசிடம் இருந்து எந்த பதிலும் இதுவரை இல்லை.

ஆந்திர தலைநகர் அமராவதி மேம்பாட்டுக்கு ரூ.15 ஆயிரம் கோடி. பீகாரில் நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு ரூ.26 ஆயிரம் கோடி, பீகார் வெள்ள நிவாரணப் பணிகளுக்கு ரூ.11,500 கோடி ஒதுக்கினார்கள். ஒன்றிய நிதி நிலை அறிக்கையில். அந்த மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கக் கூடாது என்று சொல்லவில்லை. தமிழ்நாட்டுக்கு ஏன் ஒதுக்கவில்லை என்றுதான் கேட்கிறோம். ஆந்திராவும், பீகாரும் ஒன்றிய அரசைக் காப்பாற்றும் மாநிலங்கள் என்பதை அறியாதவர்கள் அல்ல நாம். தமிழ்நாட்டில்தான் பா.ஜ.க.வைக் காப்பாற்ற யாராவது இலவச ஆக்ஸிஜன் தர வேண்டும் என்பதும் நம்மை விட பா.ஜ.க. தலைமைக்கு நன்கு தெரியும். அதனால்தான் தமிழ்நாட்டை ஒதுக்கியே, தீண்டாத மாநிலமாக வைத்துள்ளார்கள்.

இந்தியாவின் மிகப்பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலமாக தமிழ் நாடு இன்று வளர்ந்து நிற்கிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.87 விழுக்காடு என்ற அளவில் தமிழ்நாடு பங்களிப்பினை வழங்குகிறது. ஆனாலும் ஒன்றிய அரசை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலையில்தான் வைத்துள்ளார்கள்.

"ஒன்றிய அரசால் பகிர்ந்தளிக்கப்படும் நிதியிலிருந்து குறைந்தபட்சமாக 50 சதவீதம் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும். வரி அல்லாத வருவாய்களையும் பகிர்ந்தளிக்கப்படும் நிதிகளின் தொகுப்பில் இணைப்பதற்கு உரிய அரசமைப்புச் சட்டத் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். மாநில அரசின் பட்டியலில் இடம்பெற்றுள்ள இனங்களின் கீழ் நிறைவேற்றப்படும் நலத்திட்டங்களுக்கு 75 சதவீத பங்களிப்பை ஒன்றிய அரசு வழங்க வேண்டும். மாநில பேரிடர் மேலாண்மை நிதியினை 2026-27 ஆம் ஆண்டு காலகட்டத்தில் 50 சதவீதமாக உயர்த்தி, 90:10 என்ற அளவில் ஒன்றிய மாநில நிதிப் பங்கீட்டில் வழங்க வேண்டும்" - என்ற கோரிக்கைகளை 16 ஆவது நிதிக்குழுவிடம் தமிழ்நாடு அரசு வைத்துள்ளது.

ஒவ்வொரு இயற்கை பேரிடர் வரும் போதும் ஒன்றிய அரசாங்கத்தின் செயற்கைப் பேரிடர்தான் நம் நினைவுக்கு வந்து நிலைகுலைய வைக்கிறது.

●●

வேலூர் வி.ஐ.டி. பல்கலைக்கழகம் அண்ணா கலையரங்கில் அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு 80 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.3.01 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வழங்கினார். உடன் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, துணை மேயர் எம்.சுனில்குமார், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் வேல்முருகன், துணைத் தலைவர் சரவணன், மண்டலக் குழுத் தலைவர் புஷ்பலதா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் எ.வ.வேலு நடத்தி வைக்கிறார் - எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி. தலைமை!

தேசூர் அ.செல்வம் - ஆர்.கிருஷ்ணவேணி எம்.சி. இல்லத் திருமணம்!

கு.பிச்சாண்டி - எ.வ.வே.கம்பன் - செஞ்சி கே.எஸ்.மஸ்தான் - சீதாபதி - அம்பேத்குமார் - நிர்வாகிகள் வாழ்த்து!

திருவண்ணாமலை டிச. 4 -

முன்னாள் தலைமை பொதுக்குழு உறுப்பினர் - மாவட்டப் பிரதிநிதி தேசூர் அ.செல்வம் - தேசூர் பேரூராட்சி 10-வது வார்டு கவுன்சிலர் ஆர்.கிருஷ்ணவேணி ஆகியோரது இல்ல திருமண விழாவை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எ.வ.வேலு, எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி. தலைமையில் நடத்தி வைக்கிறார்.

தேசூர் அ.செல்வம் - ஆர்.கிருஷ்ணவேணி ஆகியோரது புதல்வர் டாக்டர் எஸ்.கலாநிதி, திருக்கோவிலூர் சந்தப்பேட்டை எம்.இரவி - பி.இராஜேஸ்வரி ஆகியோரது மகள் டாக்டர் ஆர்.ராதிகா ஆகியோரது திருமணம் நாளை (5.12.2024 - வியாழன்) காலை 7.30 மணி முதல் 9.00 மணிக்குள்ளாக வி.கே.ஆர். சாந்தி பேலஸ் தேசூரில் நடைபெறுகிறது.

மணவிழாவிற்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ். தரணிவேந்தன் எம்.பி. தலைமை தாங்குகிறார். சட்டப்பேரவை துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, மாநில மருத்துவர் அணி துணைத் தலைவர் எ.வ.வே.கம்பன், செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஆர். சீத்தாபதி, எஸ். அம்பேத்குமார் எம்.எல்.ஏ., புதுவை எம்.எல்.ஏ. இரா.சிவா, மாநில பொறியாளர் அணி கு.கருணாநிதி, பேரூராட்சித் தலைவர் இராதா ஜெகவீரபாண்டியன், நகரச் செயலாளர் டி.கே.மோகன், மாவட்ட மீனவரணி அமைப்பாளர் ஆர்.மனோகரன், நல்லாசிரியர் பி. இராஜவேலு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். ஓய்வு பெற்ற காவல் ஆய்வாளர் அ.அன்பழகன் வரவேற்கிறார்.

பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு மணவிழாவை நடத்தி வைத்து வாழ்த்துகிறார்.

மேலும் சி.என்.அண்ணாதுரை எம்.பி., எம்.கே.விஷ்ணுபிரசாத் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.சிவானந்தம், வ.அன்பழகன், ஒ.ஜோதி, மு.பெ.கிரி, மாவட்டப் பொறுப்பாளர் ப.சேகர், பெ.சு.தி.சரவணன் எம்.எல்.ஏ., ஆ.வேல்முருகன் எம்.எல்.ஏ., கே.லோகநாதன், ஜெயராணி ரவி, என்.பாண்டுரங்கன், பார்வதி சீனுவாசன், டி.தட்சிணாமூர்த்தி, இரா.ஸ்ரீதரன், நிர்மலா கார்த்தி வேல்மாறன், கார்த்திகேயன், எவரெஸ்ட் நரேஷ்குமார், எம்.துரை, சீனி.கார்த்திகேயன், டாக்டர் வி.முத்து, பா.போஸ், எதிரொலிமணியன், அ.தயாளன், எச்.ஜலால், ந.ராமச்சந்திரன், ஏ.சி.மணி, ஆர்.மோகனவேல், ஆர்.ராஜசேகர், எம்.பாபுவேல்முருகன், கோபால், எல்.அப்சர்லியாகத், மணியம்மைதேவன், கே.டி.ராமசாமி, டி.மனோகரன், செஞ்சி சிவா, அன்னை சீனுவாசன், டி.கே.முனியப்பன், வி.லட்சுமி, இ.மணிகண்டன், பி.காமராஜ், எஸ்.கிஷோர்குமார், எச்.மதன்குமார், படூர் வெங்கடேசன், டி.என்.சௌரிராஜன், என்.அம்சா, ஜி.தனசேகர், ஏ.என்.சம்பத், ஆர்.வெங்கடேஷ்பாபு, கே.விஸ்வநாதன், ஆர்.முருகன், வள்ளிமைந்தன், ஏ.நவாப் ஜான், ஜி.தினேஷ்குமார், எஸ்.ஜாகீர்உசேன், வி.முருகன், இ.அருண், சந்திரன், கே.தீனதயாளன், எம்.எஸ்.மாபு, ரீனா இளவரசி, ஆர்.வாசுகிபாபு, பொன்னேரி சிவா, சி.மகேந்திரன், ஆர்.வி.பாஸ்கர், திலகவதி செல்வராஜ், எல்.பி.நெடுஞ்செழியன், ஆர்.விஜயகுமார், கே.எஸ்.எம்.மொக்தியார் அலி மற்றும் பலர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

தேசூர் பெரியார் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த அ.மனோகரன், 7-வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர் அ.சேகர் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

புயல் மழை! நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தினார்!

திருவண்ணாமலை மாநகர் முழுவதும் ஏற்பட்டுள்ள சேதங்கள்!

அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு!

திருவண்ணாமலை, டிச.4 -

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் நேற்று முன்தினம் (2.12.2024) திருவண்ணாமலை வ.உ.சி நகரில் மண் சரிவு ஏற்பட்டு மீட்பு பணி நடைபெறும் இடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் கோஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர், தீபக் ஜேக்கப், மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, மாநில தடகளச் சங்க துணைத்தலைவர் மரு. எ.வ.வே.கம்பன் ஆகியோர் உடனிருந்தனர்.

இந்நிகழ்வில் பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது : -

திருவண்ணாமலை மாவட்டத்தில் பெஞ்சல் புயல் கடக்கின்ற போது தொடர் மழை பெய்து வருகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் 1965 ஆம் ஆண்டில் முதல் முதலில் இந்த அளவிற்கு மழை பெய்தது. ஆனால் 1965 ஆம் ஆண்டிற்கு பிறகு புயல் தாக்கத்துடன் இந்த அளவிற்கு மழை பெய்யவில்லை. அரசின் சார்பாக முதலமைச்சர் அவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆணையிட்டதன் அடிப்படையில், நமது மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகம் சார்பில் ஏறத்தாழ 36 முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, திருவண்ணாமலையில் மட்டும் ஏறத்தாழ 150 நபர்கள் இந்த முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பிற இடங்களான ஆரணி, சேத்பட், கலசபாக்கம், கீழ்பென்னாத்தூர், தண்டராம்பட்டு ஆகிய பகுதிகளில் முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, பாதிக்கப்பட்டவர்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மலையடிவாரத்தில் மண் சரிவு!

தொடர் மழை காரணமாக திருவண்ணாமலை மலை அடிவாரத்தில் ஏற்பட்ட மண் சரிவின் காரணமாக வ.உ.சி நகர் பகுதியில் உள்ள நான்கு வீடுகளில் கடும் சேதம் ஏற்பட்டுள்ளது. முன்னதாக மழை எச்சரிக்கையாக மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக அந்தப் பகுதியில் இருந்த பொதுமக்கள் அனைவரும் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல அறுவுறுத்தி நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு தேவையான உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் மலை அடிவாரத்தில் இருந்த ஒரு வீட்டில் மட்டும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 குழந்தைகள் உட்பட 7 நபர்கள் மலை சரிவில் சிக்கி உள்ளனர், அவர்களை மீட்கும் பணிகளில் தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் 35 வீரர்களும், திருவண்ணாமலை மாவட்ட காவல் கமாண்டோ குழுவினர் 50 வீரர்களும் மாநில மீட்பு படையினர் 20 வீரர்களும், திருவண்ணாமலை ஆயுதப்படை காவலர்கள் 40 நபர்களும், மேலும் காவல் துறை சார்பாக 60 நபர்களும் என காவல்துறை சார்பாக மொத்தம் 170 நபர்கள் மீட்பு மற்றும் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் மலை அடிவாரத்தில் மண் சரிவுகள் ஏற்படும் அபாயம் உள்ளதால் அந்தப் பகுதியில் உள்ள பொது மக்கள் அனைவரையும் உடனடியாக வெளியேற்றி முருகையன் அருகாமையில் உள்ள திருமண மண்டபங்கள் உள்ளிட்ட இடங்களில் தங்கவைக்கவும், அவர்களுக்குத் தேவையான உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு உத்தரவிட்டதை தொடர்ந்து, மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக அனைத்து நடவடிக்கைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும், மழை வெள்ள பாதிப்புகளை நிவர்த்தி செய்யும்பொருட்டு, தேங்கியுள்ள நீரை உடனடியாக வெளியேற்றுவதற்கு வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித் துறை உள்ளிட்ட துறைச்சார்ந்த அலுவலர்கள் உரிய நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

மேலும் மாவட்டம் முழுவதும் நிவாரண முகாம்களில் உள்ள மக்களுக்குத் தேவையான உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

அமைச்சர் எ.வ.வேலு மீட்பு பணி நடைபெறும் இடத்தினை பார்வையிட்டு, தொடர்ந்து திருவண்ணாமலை மாநகரப்பகுதி முழுவதிலும் ஏற்பட்டுள்ள சேதங்களை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டனர்!

திருவண்ணாமலை மலையடிவாரத்தில் இருந்த பொதுமக்களை கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அமராவதி முருகையன் நகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளி நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதையும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் உள்ள வேங்கிக்கால் ஏரியில் இருந்து நீர் வெளியேறுவதையும், தொடர்ந்து, திருவண்ணாமலை - திண்டிவனம் சாலையில் நீர் வெளியேறுவதையும், சமுத்திரம் ஏரி நிரம்பி நீர் வெளியேறுவதை பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள்துறை அமைச்சர் எ.வ.வேலு பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு. சுதாகர், மாவட்ட வருவாய் அலுவலர் இரா. இராம்பிரதீபன், மாநகராட்சி ஆணையர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

மதுரை வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பாக கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை கிழக்கு தொகுதி ஆண்டார்கொட்டாரம் ஊராட்சியில் நடைபெற்ற இலவச பொது மருத்துவ முகாமினை மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்தார். மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் ஜி.பி.ராஜா, இன்பா ஏ.என்.ரகு ஆகியோர் ஆலோசனையின்படி வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் இளங்கோவன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலாளர் ஹக்கீம், மாவட்ட வழக்கறிஞர் அணி வக்கீல் கலாநிதி, ஊராட்சி மன்றத் தலைவர் சீமான், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வெற்றிச் செல்வன், மருதுராஜா, ஒன்றியக் கவுன்சிலர் கார்த்திக் மற்றும் பலர் பங்கேற்றனர்.